MARTHANDAM DIOCESAN BULLETIN
For Private Circulation Only



# மலங்கரை கத்தோலிக்க பொதுநிலையினர் தினம்

மே 03

Printed Matter

To

BOOK POST

If Undeliveried please return to ...

Bishop's House, Diocese of Marthandam, Marthandam P.O., K.K Dt.- 629 165

Santhom Press, Diocese of Marthandam Mob : +91 94-42-469852


# Bulletin

Diocese of Marthandam

மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்




# ஆண்டவரின் விண்ணேற்றம்

மே 14

மலர் 23 மே 2026 இதழ் 05

# Bishop's Diary

| Date | Day | Time | Programme | Place |
|---|---|---|---|---|
| 01.05.2026 | Friday | 7.00 am<br>5.30 pm | Feast Mass<br>Feast Mass | Unnamalakkadai<br>Adaikakuzhi |
| 03.05.2026 | Sunday | 9.00 am<br>2.30 pm | Feast mass<br>Feast Mass | Fathimanager<br>Kirathoor |
| 04.05.2026 | Monday | 9.30 am | Graduation Day | Mar Ephraem College |
| 07.05.2026 | Thursday | | CBCI - Standing Committee | Banglore |
| 09.05.2026 | Saturday | <br>5.00 pm | Christian Worker's Movement<br>Blessing of Chapel at Trichy mission | Velankkanni<br>Trichy |
| 10.05.2026 | Sunday | 8.00 am<br><br>2.30 pm | Holy Mass and Honouring MCA,Sabhathala Samidhi<br>Light Class | <br>Thiruvalla<br>Thiruvalla |
| 11.05.2026 | Monday | 10.00 am<br>3.30 pm<br>6.30 pm | Marriage<br>UCC meeting<br>UCCCT gathering | Kirathoor<br>Chellamkonam<br>Bishop's House |
| 13.05.2026 | Wednesday | 9.30 am | Final Profession - Dm Sisters | Marthandam |
| 16.05.2026 | Saturday | 10.00 am<br>4.30 pm | Pastoral Council<br>Feast Mass | Bishop's House<br>Chitharal |
| 17.05.2026 | Sunday | 10.30 am<br>2.30 pm | Feast mass / Altar Blessing<br>Labour Commission Rally | Cheruppaloor<br>Kuzhithurai |
| 18.05.2026 | Monday | 9.15 am | Marriage | Tholayavattam |
| 19.05.2026 | Tuesday | | Labour Commission meeting | Banglore |
| 20.05.2026 | Wednesday | 7.00 am<br>6.00 pm | Holy Mass<br>Convention | Manjakala<br>Trichy |
| 21.05.2026 | Thursday | | Convention | Trichy |
| 22.05.2026 | Friday | 6.00 pm | Inauguration of Diocesan Convention | Thabor Retreat Center |
| 23.05.2026 | Saturday | 6.00 pm | Diocesan Convention | Thabor Retreat Center |
| 24.05.2026 | Sunday | 8.00 am<br>4.00 pm<br>6.00 pm | Feast Mass<br>Laity Gathering<br>Diocesan Convention | Pinkulam<br>Mariagiri<br>Thabor Retreat Center |
| 25.05.2026 | Monday | 10.00 am | Marriage | Vettukuzhi |
| 28.05.2026 | Thursday | | Leadership Training Program - MCYM | |
| 29.05.2026 | Friday | 6.00 pm | Orientation Program to Seminarians | Nalanchira |
| 31.05.2026 | Sunday | 8.00 am<br>10.30 am | Feast Mass<br>Feast Mass | Kuzhithurai<br>Muthalar |




# மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்
# Marthandam Diocesan Bulletin

மலர். 23 மே 2026 இதழ். 05


***Patron***
*His Excellency*
*Most Rev. Vincent Mar Paulos*

***Editor***
*Rev. Fr. Franklin Jose*
*The Chancellor*

***Cover Design***
*Mrs. Uni Kumari B.*

***Printing***
*Santhom Press,*
*Marthandam*

***Published By***
*The Chancellor*
*Diocese of Marthandam*

மலர். 23 ஏப்ரல் 2026 இதழ். 04


**Address :**
Bishop's House,
Diocese of Marthandam,
Marthandam P.O.,
K.K Dist. - 629 165
E-mail:mardiobulletin@gmail.com




# The Malankara Syrian Catholic Church
# Bulletin of the Diocese of Marthandam



மலர்.23 மே 2026 இதழ்.05

**முக்கியமான நாட்கள்**

மே 2026

| | |
|---|---|
| 01 | சர்வதேச தொழிலாளர் தினம் |
| 03 | உலக பத்திரிகை சுதந்திர தினம் |
| 03 | உலக சிரிப்பு தினம் |
| 07 | உலக தடகள தினம் |
| 08 | உலக ரெட் கிராஸ் தினம் |
| 10 | அன்னையர் தினம் |
| 11 | தேசிய தொழில்நுட்ப தினம் |
| 12 | சர்வதேச செவிலியர் தினம் |
| 17 | தொடர்பு தினம் |
| 18 | சர்வதேச அருங்காட்சியக தினம் |
| 21 | உலக கலாச்சார பன்முகத்தன்மை தினம் |
| 22 | உலக உயிரியல் பன்முகத்தன்மை தினம் |

**உள்ளடக்கம்**


1. Circular 03
2. ஆயர் லாறன்ஸ் மார் எப்ரேம் ஆண்டகையின் 29-வது ஆண்டு நினைவு பாதயாத்திரை மற்றும் நினைவுதின கொண்டாட்டம் 11
3. குருப்பட்ட நிகழ்வுகள் 12
4. குருக்களுக்கான தொடர் உருவாக்க பயிற்சி 12
5. இளங்குருமடச் செய்திகள் 13
6. மேரி மக்கள் துறவற சபை 15
7. MIDS 16
8. MCA 18
9. பெயர்விழா நல்வாழ்த்துகள் 20
10. Health for One Million (Hom) 20
11. MCYM 21
12. திருமண ஆயத்தப்பயிற்சி 21
13. கொமித்சியச் செய்திகள் 22
14. மறைவட்ட செய்திகள் 23
15. ஆயரின் ஏப்ரல் மாத நிகழ்வுகள் 24
16. இம்மாதம் நினைவு கூர 27
17. Bishop's Diary 28



*Printed by*
Santhom Press, Diocese of Marthandam. Mob : +91 94-42-469852




மலங்கரை சுறியானி கத்தோலிக்கத் திருச்சபை

2026-ம் ஆண்டு பொதுநிலையினர் தினத்தை முன்னிட்டு

ஆயர் மாமன்ற பொதுநிலையினர் பணிக்குழுவின் தலைவர்

**மேதகு ஆயர் ஜோசப் மார் தோமஸ் ஆண்டகை**

வழங்கும் சுற்றறிக்கை

## பொதுநிலையினர் தினம்

*மதிப்பிற்குரிய ஆயர்களே, கோர் எப்பிஸ்கோப்பாமார்களே, ரம்பான்மார்களே, குருக்களே, துறவிகளே, இறையேசுவில் அன்புமிக்க சகோதர சகோதிரிகளே,*

மலங்கரை சுறியானி கத்தோலிக்க திருச்சபை மே மாதம் 3-ம் தேதி பொதுநிலையினர் தினத்தை கொண்டாடுகிறது. திருச்சபையில் பொதுநிலையினரின் அழைப்பு, பணி இவற்றை நினைவில் கொள்ளவும், பொதுநிலையினரின் திருப்பணிகளை ஊக்கப்படுத்தவும், அவர்களுக்காக இறைவேண்டல் செய்யவும் இத்தினம் கொண்டாடப்படுகிறது. அனைவருக்கும் இந்த தினத்தின் வாழ்த்துக்களும் ஆசீரும்.

### 1. பொதுநிலையினர் தினம் - ஆன்மீக மறுமலர்ச்சியின் நாள்

திருத்தந்தை 14-ம் லியோ இறைவேண்டல், அறிவு தேடுதல், தோழமை கலந்த கூடுகைகள் யாவும் ஆன்மீக மறுமலர்ச்சிக்கு உதவுகிறது என்கிறார். பொதுநிலையினரின் தினத்தை முதலில் இறைவேண்டல் தினமாக நாம் அனுசரிக்க வேண்டும். 'மனம் திரும்பி நற்செய்தியை நம்புங்கள்' என்ற அறைகூவலுடன் (மாற் 1:15) இயேசு தம் பணியை துவங்கினார். இந்த அழைப்புக்கு பதில் மொழி தந்து நம்பிக்கையிலும் எதிர்நோக்கிலும் அன்பிலும் வளரும் அனுபவமே ஆன்மீகம். அடிப்படையில் ஒரு கிறிஸ்தவ ஆன்மீகம் மட்டுமே உள்ளது. அது திருச்சபையுடன் இணைந்த ஆன்மீகம். இந்த ஆன்மீகம் ஆண்டவர் இயேசுவின் பாடு, மரணத்தில் நிறைவு செய்யப்பட்ட பாஸ்கா மறையுண்மைகளில் வேரூன்றி தூய

நற்கருணையில் மையம் கொண்டுள்ள திருச்சபை குழுமத்தில் வாழ்வதாகும். இந்த அருள்வாழ்வு இடைவிடாத இறைவேண்டலிலும், திருப்பலியில் பங்கேற்பதிலும், அருளடையாள வாழ்விலும் அடங்கியுள்ளது. கிறிஸ்தவ வாழ்வு என்பது நம்பிக்கை வாழ்வு. செப ஒழுங்கே நம்பிக்கை ஒழுங்கு. நம்பிக்கையை வாழ்வது அருள்வாழ்வுயென அழைக்கப்படுகிறது. காலம் முன்வைக்கும் சவால்களை சந்திக்க அதிகமான ஆன்மீக ஆற்றல் இன்று தேவைப்படுகிறது. "உங்கள் ஒளி மனிதர் முன் ஒளிர்க" (மத் 5:16). பொதுநிலையினர் தினத்தை ஆன்மீக மறுமலர்ச்சியின் தினமாக்குவோம்.

**2. பொதுநிலையினரின் அழைப்பும் பணியும்**

பொதுநிலையினரின் பணிகளை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

i. திருச்சபைக்கு உள்அவர்கள் செய்யும் பணி (Ad intra)

ii. திருச்சபைக்கு வெளியே செய்யும் பணி (Ad extra)

முதல் பணி, திருச்சபையின் செயல்பாடுகளை இலட்சியமாகக் கொண்டுள்ளது. இரண்டாவது பணி, உலகில் மாற்றங்களை உளவாக்க உலகு சார்ந்த காரியங்களை இலட்சியமாக கொண்டுள்ளது. திருச்சபை சமூகத்தை கட்டியெழுப்புவதும், புத்துலகு படைப்பதும் பொதுநிலையினரின் கடமையென இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் கற்பிக்கின்றது. தொடக்க திருச்சபையில் திருத்தூதர்கள் நம்பிக்கையாளர்களை உடன் உழைப்பாளர்களாக கருதினர். "உன் மீது என் கைகளை வைத்து திருப்பணியில் அமர்த்திய போது உனக்குள் எழுந்த கடவுளின் அருட்கொடையினை தூண்டி எழுப்புமாறு நினைவுறுத்துகிறேன்" (2 திமொ 1:6).

திருச்சபையின் திருப்பணிகளில் பொதுநிலையினரின் பங்கேற்பு இன்றியமையாதது. திருமுழுக்கு பெற்ற அனைவரும் கிறிஸ்துவுக்கு சாட்சிகளாக மாறவும், நற்செய்தியை பறைசாற்றுபவர்களாகவும் அழைக்கப்பட்டுள்ளனர். இந்த அழைப்பையும் பணியையும் உணர்ந்தெழுந்த மலங்கரை சுறியானி கத்தோலிக்கத் திருச்சபை



நற்செய்தி சங்கத்திற்கு வடிவம் கொடுத்தது. இவர்களின் அர்ப்பணிப்பு திருச்சபையின் நற்செய்திப் பணியை எழுச்சி பெறச் செய்தது. அது பொதுநிலையினரின் அழைப்பையும் பணியையும் ஆற்றல் படுத்தியுள்ளது. நாம் வாழும் இச்சூழலில் பொதுநிலையினரின் நற்செய்திப்பணிகள் அதிகம் பலன்தர வேண்டும். "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை அறிவியுங்கள்" என ஆண்டவர் நமக்கு கட்டளையிட்டார் (மாற் 16:15). நாம் அனுபவித்தறிகின்ற இறையன்பையும் கருணையையும் நாம் பகிர்ந்து கொள்ள வேண்டும். "இச்சிறியோருள் ஒருவர் கூட நெறிதவறி போகக் கூடாது என்பதே உங்கள் விண்ணகத் தந்தையின் திருவுளம். எல்லா மனிதரும் மீட்பு பெறவும் உண்மையை அறிந்துணரவும் வேண்டுமென அவர் விரும்புகிறார்" (1 திமொ 2:4). பொதுநிலையினர் தினத்தில் கடவுள் நமக்குத் தந்த அழைப்பையும் பணியையும் உணர்ந்து காலகட்டம் எழுப்பும் சவால்களை சந்தித்து செயல்பட முயற்சிப்போம்.

**3. பொதுநிலையினரின் திருப்பணி**

உலகியலாக்கம் (Secularization) அதிகமான தாக்கம் தருகின்ற ஒரு சூழலில் நாம் வாழ்கிறோம். நம்பிக்கை வாழ்வை நம்பிக்கையின் பிடியிலிருந்து விடுவித்து பார்க்கின்ற ஒரு சமூகச் செயலே உலகியலாக்கம். இதன் விளைவாக இன்றைய சமூகத்தில் மூன்று பிரச்சனைகள் உடலெடுக்கின்றன.

i. குடும்பங்களின் மாண்பிழந்த நிலை

ii. நம்பிக்கை வீழ்ச்சி

iii. விழுமியங்களின் வீழ்ச்சி

சமூகத்தின் எல்லா துறைகளிலும் மேற்கூறிய உலகியலாக்கத்தின் விளைவுகள் காணப்படுகின்றன. 'இன்றைய உலகில் திருச்சபை' என்னும் இரண்டாம் வத்திக்கான் திருச்சங்க ஏடு உலகின் மீது செயலாக்க அணுகுமுறை தேவையென அறிவுறுத்துகிறது. திருச்சபையின் திருப்பணிகள் நம்பிக்கை வளர்ச்சிக்கும் அன்புக்கும் பணிவாழ்வுக்கும் இட்டுச் செல்ல வேண்டும். நம்பிக்கையின் ஒளியில் தளரா மனத்துடனும் அன்புடனும் உலகில் பணிவிடைபுரிய

பொதுநிலையினர் முயற்சிக்க வேண்டும். கிறிஸ்து பிறருக்காக மனிதரானது போல ஒவ்வொரு பொதுநிலையினரும் பிறருக்காக திருச்சபையின் திருப்பணிகளில் ஈடுபட வேண்டும். குறிப்பாக துன்பதுயரங்களும் சவால்களும் நிறைந்த சூழல்களில் பொது நிலையினரின் திருப்பணி அதிக முக்கியத்துவம் பெறுகிறது. மனிதன் தனது உலக தேவைகளை நிறைவேற்றுவதற்கும் மாண்புடன் வாழ்வதற்கும் தேவையான உதவிகளை பொதுநிலையினர் தலைவர்கள் முன்னெடுக்க வேண்டும். அரசியல், சமூகம், பண்பாடு, கல்வி, தொழில்நுட்பம் போன்ற துறைகளில் கிறிஸ்துவின் அன்பையும் இரக்கத்தையும் ஊடுருவச் செய்ய வேண்டும்.

உலகில் நற்செய்தி விழுமியங்களை வாழவும் அவற்றிற்கு சாட்சிகளாகவும் பொதுநிலையினருக்கு கடமையுண்டு. மனித உரிமை பாதுகாப்பு, ஜனநாயகம், மதச்சார்பின்மை, சமூக பொருளாதார மேம்பாடு, சமூகத்தில் நலிந்த பிரிவினரின் பாதுகாப்பு, மது மற்றும் போதை மருந்துகள் இவற்றிற்கு எதிரான போராட்டங்களில் இணைவதை பொதுநிலையினரின் செயல்பாடுகளாக நாம் பட்டியலிட வேண்டும். இத்திருப்பணிகளில் இறையாட்சியை முன்னிட்டு ஈடுபட வேண்டும். அடிப்படையில் திருச்சபையின் திருப்பணியும், பொதுநிலையினரின் திருப்பணியும் இறையரசுக்கான திருப்பணியே. பொதுநிலையினரின் நற்செய்திப்பணி இறையரசை கட்டியெழுப்ப நடத்தும் உண்மையான சேவையாகும். 'தொண்டு ஏற்காமல் தொண்டு செய்யவும், அனைவரின் மீட்புக்கு ஈடாக தம் உயிரை கொடுப்பதற்கும் இயேசு இவ்வுலகத்திற்கு வந்தார்' (மாற் 10:45). இந்த இயேசுவை பின்பற்றுவது பொதுநிலையினரின் கடமை.

### 4. பொதுநிலையினர் தினவிழா

இந்நாள் திருச்சபையிலுள்ள அனைத்து பொதுநிலையினரின் திருநாள். மலங்கரை சுறியானி கத்தோலிக்கத் திருச்சபையில் செயல்படும் அமைப்புகளான MCA, MCMF, MCYM, நற்செய்தி சங்கம், வின்சென்ட் தே பால், மரியாயின் சேனை, தந்தையர் சங்கம், அருள்வாழ்வியங்கள் போன்ற அனைத்து இயங்கங்களும் இணைந்து



இறைவேண்டல் மனநிலையில் இத்தினத்தை கொண்டாட வேண்டும். துரிதத்தில் வளரும் நம் திருச்சபைக்கு பொதுநிலையினர் வழங்கும் திருப்பணிகளை நன்றியுடன் நினைக்கின்றேன். நற்செய்திப்பணியை தலையான பணியாகக் கொண்ட மறைமாவட்டங்களில் தியாக உள்ளத்துடன் நற்செய்தி பணி செய்யும் பொதுநிலையினரை ஒப்புக்கொடுத்து செபிக்கிறேன். இந்தியாவிற்கு வெளியேயுள்ள மறைமாவட்டத்திலும் பிற இடங்களிலும் திருச்சபையை கட்டியெழுப்ப இடைவிடாமல் உழைத்துக் கொண்டிருக்கும் பொதுநிலையினரை மனமுவந்து பாராட்டுகிறேன். பொதுநிலையினர் தினத்தில் திருப்பலியின் மத்தியில் சேகரிக்கும் காணிக்கையை பொதுநிலையினரின் பணிக்குழுக்களுக்காக வழங்க வேண்டும். தாராள மனதுடன் நன்கொடை வழங்கி பொதுநிலையினர் பணியை ஊக்குவிக்க அழைப்பு விடுக்கிறேன். நம் திருச்சபையின் தீர்மானப்படி இந்த காணிக்கையை பங்குத்தந்தையர்கள் சேகரித்து அந்தந்த மறைமாவட்ட நிதி அலுவலகத்தில் ஒப்படைக்கவும். நிதிஅலுவலர்கள் அதன் ஒரு பகுதியை மறைமாவட்ட பொதுநிலையினர் திருப்பணிகளுக்கும், எஞ்சிய பகுதியை சபையளவிலான பொதுநிலையினர் திருப்பணிகளுக்காக காதோலிக்கேட் மையத்திலுள்ள நிதி அலுவலகத்திலும் ஒப்படைக்க வேண்டும். பொதுநிலையினரின் விண்ணக பாதுகாவலரான புனித சூசையப்பர் நமக்கு துணையாளரும், பாதுகாவலருமாக இருப்பாராக.

உயிர்த்த ஆண்டவர் பொதுநிலையினரின் திருப்பணிகளை வாழ்த்தி ஆசீர்வதிப்பாராக.

**† மேதகு ஜோசப் மார் தோமஸ்**
பொதுநிலையினரின் ஆயர்
மாமன்றத்திற்கான பணிக்குழு தலைவர்

பெத்தேரி, மறைமாவட்ட ஆயர்
காதோலிகேட் மையம்
பட்டம், திருவனந்தபுரம்,
பொதுநிலையினர் தினம் 2026

**Most Rev. Vincent Mar Paulos**
Bishop of Marthandam

Bishop's House
Marthandam
K.K.Dist - 629 165

Cir. No. 4/2026

30.04.2026

# CIRCULAR

***அன்பான அருட்தந்தையர்களே, இருபால் துறவிகளே, இறைமக்களே***

அகில உலகம் மே மாதம் 1-ம் தேதி தொழிலாளர்கள் தினத்தை கொண்டாடுகிறது. அகில உலக கத்தோலிக்கத் திருச்சபையானது இந்நாளில் தொழிலாளர்களின் பாதுகாவலரான புனித யோசேப்பின் தினமாகவும் அனுசரிக்கிறது. நாசேரேத்தில் ஒரு தச்சனாக வாழ்ந்து வாழ்விலும் உழைப்பிலும் கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றி தொழிலாளர்களுக்கு முன்மாதிரியாய் திகழ்பவர் புனித யோசேப்பு.

நமது மறைமாவட்டத்தில் தொழிலாளர் நலப்பணியானது சமூக சேவை பிரிவுடன் இணைந்து செயல்பட்டு வந்தது. தற்பொழுது இந்திய ஆயர் பேரவை வழிகாட்டுதலுக்கு இணங்கியும் தமிழக ஆயர் பேரவையின் அறிவுறுத்தலுக்கு இணங்கவும் தொழிலாளர் இயக்கங்களை ஒருங்கிணைக்க ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் தொழிலாளர் கூட்டமைப்பு தொடங்கப்பட உள்ளன. நமது மறைமாவட்டத்தில் அமைப்பு சாரா தொழிலாளர்களை ஒருங்கிணைக்கும் பொருட்டு “Workers India Federation’, மார்த்தாண்டம் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது அனைவரும் அறிந்ததே. மறைமாவட்ட தொழிலாளர் நலப்பணிக்குழுவின் கீழ் இந்த இயக்கம் செயல்படும். தொழிலாளர்களின் நலனைக் குறித்தும்



அரசு வழங்கும் உதவிகளைப் பெற்றுக் கொடுக்கும் பொருட்டும் இப்பணிக்குழு முயற்சிக்க வேண்டும்.

இந்த ஆண்டு 2026 தொழிலாளர் தினத்தை நாம் “செயற்கை நுண்ணறிவு யுகத்தில் தொழிலாளர்களின் மாண்பும் உரிமையும்” என்ற மையச்சிந்தனையில் சிறப்பிக்கிறோம். இன்றைய நவீன காலத்தில் தொழிலாளர்கள் சந்திக்கும் சவால்களையும், வாய்ப்புகளையும் பற்றி சிந்திக்க இத்தினம் நமக்கு அழைப்புவிடுக்கிறது.

விவிலிய பார்வையில், உழைப்பு என்பது வெறுமனே வாழ்வதாரத்திற்கான ஒரு வழி மட்டுமல்ல; மாறாக கடவுளை மகிமைப்படுத்துவதற்கும் பிறருக்கு சேவை செய்வதற்கும் இறைவன் கொடுத்த மாபெரும் பொறுப்பும் ஆசியும் ஆகும். தொடக்கநூலில் ஏதேன் தோட்டத்தைப் பண்படுத்தவும் பாதுகாக்கவும் ஆண்டவராகிய கடவுள் மனிதனை அங்கு கொண்டுவந்து குடியிருக்க செய்தார். (தொநூ 2:15) மனிதன் உழைக்கவேண்டும் என்பது கடவுளின் திட்டம். உழைப்பு என்பது மனிதரின் இயல்போடு இணைந்தது. அது இறைவனுடன் இணைந்து செயல்படும்போது ஒரு புனிதப் பணியாக அமைகிறது.

இயேசு கிறிஸ்து தமது வாழ்வில் ஒரு தொழிலாளராக இருந்து, உழைப்பின் மதிப்பை உலகுக்கு எடுத்துக் காட்டினார். தாழ்மையும் சேவையும் நிறைந்த அவரது வாழ்க்கை, தொழிலாளர்களுக்கு ஒரு வழிகாட்டி. அதுபோல இயேசுவின் வழியில் திருஅவை தொடர்ந்து தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாக்கவும், அவர்களின் நலனை பேணி காக்கவும், அவர்களை மாண்போடு நடத்தவும் வலியுறுத்தி வருகிறது. தொழிலாளர்களுக்கு அடிப்படை உரிமைகள், பாதுகாப்பான பணி சூழல், சமூக பாதுகாப்பு, வாழத் தேவையான ஊதியம், பெண் தொழிலாளர்களுக்கு சம ஊதியம் போன்றவற்றை வலியுறுத்துகிறது.

இந்த ஆண்டு தொழிலாளர் தினத்தை கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள 4 கத்தோலிக்க மறைமாவட்டங்களும் இணைந்து சிறப்பிக்கின்றோம். மே மாதம் 17-ம் தேதி குழித்துறை மறைமாவட்ட பேராலய வளாகத்திலிருந்து (திரித்துவபுரம்) சரியாக 2.00 மணிக்கு தொழிலாளர் பேரணி ஆரம்பமாகி நமது மறைமாவட்ட மேய்ப்புப்பணி நிலையத்தில் (குழித்துறை) நிறைவடையும். தொடர்ந்து பொதுக்கூட்டமும் கலைநிகழ்ச்சிகளும் நடைபெறும். பங்கிலுள்ள தொழிலாளர்கள், தொழில் முனைவோர் இப்பேரணியிலும் பொதுக்கூட்டத்திலும் கலந்து கொள்ள முன்வர வேண்டும். இவ்விழாவில் குழித்துறை மறைமாவட்ட ஆயர் மேதகு ஆல்பர்ட் அனஸ்தாஸ் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்வார்கள். நம்முடைய மறைமாவட்டத்தில் தொழிலாளர் பணிக்குழுவின் செயல்பாடுகள் தொடக்க நிலையில் இருப்பதனால் பங்குதந்தையர்கள் சிறப்பு முயற்சியெடுத்து அமைப்பு சாரா தொழிலாளர்கள் இந்நிகழ்வில் பங்கேற்க உற்சாகப்படுத்தும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். தொடர்ந்து நமது மேய்ப்புப்பணி வளாகத்திலுள்ள தொழிலாளர் நலப்பணிக்குழு அலுவலகத்தில் தொழிலாளர்கள் காப்பீடு, தொழிலாளர்கள் வாரியத்தில் பதிவு செய்தல் போன்ற செயல்பாடுகளுக்கு அணுக அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இறைவன் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

*அன்புடன்,*

**† மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ்**
மார்த்தாண்டம் மறைமாவட்டம்



## ஆயர் லாறன்ஸ் மார் எப்ரேம் ஆண்டகையின் 29-வது ஆண்டு நினைவு பாதயாத்திரை மற்றும் நினைவுதின கொண்டாட்டம்

மார்த்தாண்டம் மறைமாவட்ட முதல் ஆயர் லாறன்ஸ் மார் எப்ரேம் ஆண்டகையின் 29-வது நினைவு பாதயாத்திரையானது ஆயரின் சொந்த பங்கான வெள்ளெலும்பு ஆலயத்தில் 07.04.2026 அன்று மார்த்தாண்டம், பாறசாலை மறைமாவட்ட ஆயர்களின் தலைமையில் திருப்பலி, தூபமன்றாட்டு, நினைவு கூட்டத்தோடு துவங்கப்பட்டது. மாத்தாண்டம் மறைமாவட்ட ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் திருச்சிலுவையை ஆசீர்வதித்து பாதயாத்திரையை தொடங்கி வைத்தார். பாதயாத்திரையானது அன்று மாலை ஆயரின் உடல் துயில் கொள்ளும் பேராலயம் வந்தடைந்து குருகுல முதல்வர் மோண். ஜோஸ் பிறைட் அவர்களால் திருச்சிலுவை பெற்றுக்கொள்ளப்பட்டு, தூபமன்றாட்டையும் நடத்தினார். பின்பு 08.04.2026 அன்று காலை ஆயர் அவர்கள் தலைமையில் நினைவுத் திருப்பலியும், நினைவு கூட்டமும், தூப மன்றாட்டும் நடைபெற்றது.

## குருப்பட்ட நிகழ்வுகள்

மார்த்தாண்டம் மறைமாவட்டத்திற்காக இவ்வாண்டு மூன்று திருத்தொண்டர்கள், ஏப்ரல் மாதம் 11-ம் தேதி, சனிக்கிழமை அன்று அம்பிலிகோணம், புனித தோமையார் மலங்கரை கத்தோலிக்க தேவாலயத்தில் வைத்து, மேதகு ஆயர் வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்களின் திருக்கரங்களால் குருவாக திருநிலைப் படுத்தப்பட்டனர். இக்குருப்பட்ட நிகழ்வில் நம் மறைமாவட்டத்தை சார்ந்த குருக்கள், அருட்சகோதரிகள், இறைமக்கள் மற்றும் பிற மறைமாவட்டத்தை சார்ந்த குருக்களும் கலந்துக் கொண்டு புது குருக்களுக்காக ஜெபித்தார்கள்.

புது குருக்கள் தங்களுடைய நன்றித் திருப்பலியை ஏப்ரல் மாதம் 12-ம் தேதி, ஞாயிற்றுக்கிழமை அன்று தங்களுடைய சொந்த ஆலயங்களில் வைத்து, மேதகு ஆயர். வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்களின் முன்னிலையில் நிறைவேற்றினர். குருப்பட்டம் மற்றும் முதல் நன்றி திருப்பலியிலும் ஏராளமான இறைமக்கள் கலந்து கொண்டு புது குருக்களுக்காக ஜெபித்தார்கள்.

## குருக்களுக்கான தொடர் உருவாக்க பயிற்சி

மார்த்தாண்டம் மறைமாவட்ட அருட்பணியாளர்களுக்கு தொடர் உருவாக்க பயிற்சி ‘தலைமைத்துவம்’ என்ற தலைப்பில் மேதகு ஆயர் தலைமையில், அருட்பணியாளர்கள் அருட்தந்தை லெயனார்டு CSC, அருட்தந்தை அர்னால்ட் மகேஷ் SDB ஆகியோர்களின் வழிகாட்டுதலில் சிறப்பாக நடைபெற்றது. மறைமாவட்டத்தைச் சார்ந்த ஏராளமான அருட்பணியாளர்கள் இதில் பங்கேற்று சிறப்பித்தனர்.



## இளங்குருமடச் செய்திகள்

- 07.04.2026 அன்று மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் முதல் ஆயர் மேதகு லாரன்ஸ் மார் எப்ரேம் ஆண்டகையின் நினைவு நாளையொட்டிய பாதயாத்திரை மற்றும் திருப்பலியில் அனைத்து அருள் சகோதரர்களும் சிறப்பாக பங்கேற்றனர்.
- 11.04.2026 அன்று குருப்பட்ட நிகழ்வுகளில் அனைத்து அருள் சகோதரர்களும் பக்தியாக பங்கேற்று புதுக்குருக்களுக்காக ஜெபித்தார்கள்.
- 18.04.2026 அன்று “COME AND SEE” என்ற நிகழ்வு குருமடத்தில் நடைபெற்றது. இறைஅழைத்தலை ஊக்குவிப்பதற்கும் இறை அழைத்தலை பெற்றவர்களைத் தேர்வு செய்யவும் இந்நிகழ்வு நடத்தப்பட்டது. சுமார் ஒன்பது நபர்கள் கலந்து கொண்டார்கள்.
- இறை அழைத்தலை ஊக்குவிக்கும் விதமாக மூன்று இடங்களில் இறையழைத்தல் முகாம்கள் நடத்த தீர்மானிக்கப்பட்டது. குழித்துறையை மையப்படுத்தி மார்த்தாண்டம் பேராலயத்திலும், நடைக்காவை மையப்படுத்தி நடைக்காவு ஆலயத்திலும் இந்த முகாம்கள் நடத்தப்பட்டன. இந்த முகாம்களில் ஏராளமான சிறுவர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

- ❖ மே மாதம் ஒன்பதாம் தேதி நாகர்கோயில் மறைவட்டத்தில் இந்த முகாம் நடைபெறும்.
- ❖ இறை அழைத்தலை ஊக்குவிக்கும் பொருட்டு அனைத்து அருள் சகோதரர்களும் மறைமாவட்டத்தைச் சார்ந்த அனைத்து பங்குகளுக்கும் சென்று மாணவர்களை ஊக்குவித்து வருகிறார்கள்.
- ❖ 28.04.2026 அன்று இளநிலை பட்டங்கள் குருமடத்தில் வைத்து நடத்தப்பட்டது. சகோ. ஜோபின் C. மற்றும் சகோ. ஆல்பின் S. ஆகியோர் குருத்துவ அங்கியை பெற்றுக்கொண்டார்கள். அருள் சகோதரர்கள் சஜின் L.S., ரோபின், அஜின், ஃப்ளோஜின், யோவான் ஆகியோர் முசமறோனோ, கோறுயோ பட்டங்களையும், அருள் சகோதரர்கள் ஜான் சுபின் மற்றும் அபிலாஷ் ஆகியோர் துணை திருத்தொண்டர் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்கள்.
- ❖ 29 மற்றும் 30 ஆகிய தினங்களில் MBOC பாடல்கள், பாடத்திட்டங்கள், செய்கைப் பாடல்கள், செய்முறை வழிகாட்டிகள் ஆகியவற்றை ஆசிரியர்களுக்கு கற்றுக் கொடுக்க பயிற்சி பெற அருட்சகோதரர்கள் குருமடத்தில் ஒன்று சேர்ந்து தயாரிப்புப் பணியில் ஈடுபட்டார்கள். மறைமாவட்ட மறைக்கல்வி இயக்குநர் அருட்தந்தை ஷிஜு ஜோஸ் அவர்கள் பார்வையிட்டு வழிகாட்டுதலை வழங்கினார்கள்.



# மேரி மக்கள் துறவற சபை

### ஜூபிலி நிறைவு விழா கொண்டாட்டம்

மேரி மக்கள் துறவற புனித சூசையப்பர் மாகாணத்தின் 21.04.2026 அருள் சகோதரிகள் பவள விழா காணும் அருட்சகோதரி மெர்சி DM.

### பொன்விழா காணும் அருட்சகோதரிகள்

அருட்சகோதரி லில்லி ஜோஸ் அருட்சகோதரி லிசா மேரி
அருட்சகோதரி வினாய (Late)

### வெள்ளி விழா காணும் அருள் சகோதரிகள்

அருட்சகோதரிகள் Rev. Sr. ஜெனட் மேரி, Rev. Sr. ஜோ மேரி, Rev. Sr. நீற்றா கிரேஸ், Rev. Sr. சலோமி ஜோஸ், Rev. Sr. சீனா பீட்டர், Rev. Sr. ஸ்டெல்லா றாணி, Rev. Sr. ஜெயின் மேரி

மார்த்தாண்டம மறைமாவட்ட ஆயர் மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் தலைமையில் காலை 6.30 மணிக்கு திருப்பலியும் அதனைத் தொடர்ந்து வாழ்த்துக் கூட்டமும் நடைபெற்றது பவள விழா, பொன்விழா, வெள்ளி விழா காணும் அருட்சகோதரிகளுக்கு வாழ்த்துகளும் தெரிவிக்கப்பட்டது

### வெள்ளிவிழா துவக்க விழா

மேரி மக்கள் துறவற சபையின் புனித சூசையப்பர் மாகாணத்தின் அருட்சகோதரிகள் அருட்சகோதரி நைவேதியா, அருட்சகோதரி கிளாரா, அருட்சகோதரி பிரான்சி, அருட்சகோதரி ரீஜா செல்லின், அருட்சகோதரி அல்போன்ஸ் ராஜ் ஆகியோர் 05.05.2026 அ:க் மார்த்தாண்டம் மறை மாவட்ட குரு குல முதல்வர் மோண். ஜோஸ்பிறைட் அவர்கள் தலைமையில் திருப்பலியுடன் துவக்க நிகழ்வு நடைபெற்றது. இவ்வாண்டு இனிய ஆண்டாக அமைய அருட்சகோதரிகள் ஒவ்வொருவருக்கும் வாழ்த்துக்கள்.

### புது குருக்களுக்கு வரவேற்பு

மார்த்தாண்டம் மறைமாவட்ட இவ்வருட அருட்தந்தையர்கள் அருட்தந்தை ஜெப பெனடிக்ட், அருட்தந்தை சஜின் செபாஸ்டின், அருட்தந்தை ஜெர்ஷன் ஜார்ஜ் என்பவர்களுக்கு 25.04.2026 அன்று மார்த்தாண்ட மாகாண தாய் இல்லத்தில் வைத்து சிறப்பு வரவேற்பு நடைபெற்றது.

# மார்த்தாண்டம் மறைமாவட்ட சமூக சேவை மையம் (மிட்ஸ்)

## உயர் கல்விக்கான வழிகாட்டுதல் பயிற்சி

மிட்ஸ் நிறுவனத்தில் செயல்பட்டுவரும் தளிர்கள் உலகம் திட்டத்தின் பயனாளிகளுக்கு ஆண்டுதோறும் உயர் கல்விக்கான வழிகாட்டுதல் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு 12-ம் வகுப்பு தேர்வு எழுதிய மாணவர்களுக்கான வழிகாட்டுதல் பயிற்சியானது 27.03.2026 அன்று மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடத்தப்பட்டது. மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அவர்கள் பயிற்சியினை துவங்கி வைத்தார்கள். நாகர்கோவில் பெருவிளையில் இயங்கி வரும் டி.ஐ.எம். இநிறுவனத்தை நடத்திவரும் திரு. மெர்வின் பிரசாந்த் மற்றும் திரு. பாஸ்டின் சேவியர் ஆகியோர் மாணவர்களுக்கு பயிற்சி வகுப்பை நடத்தினார்கள். உயர்கல்வி பிரிவுகள் மற்றும் அவற்றிற்கான வேலைவாய்ப்புகள் குறித்து தெளிவாக மாணவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. எந்த பாடத்திட்டம் தேர்ந்தெடுத்தால் எந்தெந்த வேலைவாய்ப்புகள் அதிகமாக உள்ளன என்றும் அதற்கான நுழைவுத் தேர்வுகளை எதிர்கொள்வது எப்படி என்பது குறித்தும் விரிவாக விளக்கப்பட்டதுடன் மாணவர்களின் சந்தேகங்களும் தீர்த்து வைக்கப்பட்டன. பின்னர் மலங்கரை ஸ்கூல் ஆப் காமேர்ஸ் கல்வி நிறுவனத்திலிருந்து பேராசிரியர்கள் வருகை தந்து மாணவர்களுக்கு வழிகாட்டுதல்கள் வழங்கினார்கள். இந்த பயிற்சியானது மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ள முறையில் அமைந்ததாக கருத்து தெரிவித்திருந்தனர். இந்த பயிற்சியில் மொத்தம் 89 மாணவ மாணவிகள் கலந்துகொண்டு பயன்பெற்றனர். மேலும் 07.04.2026 அன்று 10-ம் வகுப்பு தேர்வு எழுதிய மாணவர்களுக்கு 11-ம் வகுப்பில் எந்த பாடதிட்டத்தை தேர்ந்தெடுக்கலாம் என்ற வழிகாட்டுதல் பயிற்சி வகுப்பும் திரு. மெர்வின் பிரசாந்த் மற்றும் திரு. பாஸ்டின் சேவியர் ஆகியோரால் வழங்கப்பட்டது. இந்த பயிற்சியில் 68 மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.



## தன்னார்வலர் பயிற்சி

மிட்ஸ் எழுவோம் இயக்கம் சார்பாக 06.04.2026 அன்று தன்னார்வலர் பயிற்சி மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடத்தப்பட்டது. பயிற்சியினை மறைமாவட்ட ஆயர் மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் தலைமையேற்று துவங்கி வைத்தார்கள். இந்த நிகழ்வில் குமரி புற்றுநோய் கையேட்டின் இரண்டாம் பதிப்பு ஆயர் அவர்களால் வெளியிடப்பட்டது. இரண்டாம் பிரதி வெளியிட கோயம்பத்தூரை சேர்ந்த சுய Ransom Foundation நிறுவனர் திரு. ஜாய்சன் மற்றும் சேலத்தைச் சார்ந்த திரு. சந்தீப் ஆகியோர் நிதி உதவி வழங்கியிருந்தனர். அவர்களில் திரு. ஜாய்சன் அவர்கள் இந்த வெளியீட்டு நிகழ்வில் கலந்துகொண்டு ஆயர் அவர்களிடமிருந்து முதல் பிரதியை பெற்றுக் கொண்டார்கள். தொடர்ந்து அருட்பணி நெல்சன் அவர்கள் பயிற்சியினை வழி நடத்தினார்கள். பயிற்சியில் தன்னார்வலர்கள் தங்களது பணியை எந்த குணநலன்களோடு செய்யவேண்டும் என்று தெளிவாக விளக்கப்பட்டது. காலை 10 மணிமுதல் மாலை 3 மணி வரை நடைபெற்ற இந்த பயிற்சியில் 50 தன்னார்வலர்கள் மற்றும் மிட்ஸ் பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

## பிற நிகழ்வுகள்

1. 26.03.2026 அன்று மிட்ஸ் மண்டல அலுவலகம் பெருவிளையில் வைத்து மிட்ஸ் மற்றும் Sree Ram புற்றுநோய் அறக்கட்டளை மையம் இணைந்து இலவச புற்றுநோய் பரிசோதனை முகாமை நடத்தியது. நாகர்கோவில் பணிமண்டல இயக்குநர் அருட்தந்தை சுனீஸ் குமார் அவர்கள் முகாமினை துவங்கி வைத்தார்கள். இந்த பரிசோதனை முகாமில் 36 நபர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

2. 29.03.2026 அன்று தளிர்கள் உலகம் மாணவர்களுக்கான அறிவுத் திறன் தேர்வு மிட்ஸ் அலுவலகம், மரியகிரி, நாகர்கோவில் மற்றும் ஆற்றூர் ஆகிய பகுதிகளில் வைத்து நடத்தப்பட்டது. இந்த தேர்வினை 70 மாணவ மாணவிகள் எழுதினர்.

# MCA
## Diocese of Marthandam

### ஆயர் லாறன்ஸ் மார் எப்ரேம் நினைவு பாதயாத்திரை

மார்த்தாண்டம் மறைமாவட்ட முதல் ஆயர் லாறன்ஸ் மார் எப்ரேம் ஆண்டகையின் 29-வது நினைவு நாளை முன்னிட்டு, ஆயரின் சொந்த பங்கான வெள்ளெலும்பு ஆலயத்தில் 07.04.2026 அன்று மார்த்தாண்டம், பாறசாலை மறைமாவட்ட ஆயர்களின் தலைமையில் திருப்பலியும், தூபமன்றாட்டும், நினைவு கூட்டமும் நடைபெற்றது. மாத்தாண்டம் மறைமாவட்ட ஆயர் வின்செண்ட் மார் பவுலோஸ் திருச்சிலுவையை ஆசீர்வதித்து மறைமாவட்ட தலைவர் திரு. வர்க்கீஸ் அவர்களிடம் ஒப்படைத்து பாதயாத்திரையை தொடங்கி வைத்தார்கள். பின்னர் பின்குளம் ஆலயத்தில் தூப மன்றாட்டு நடத்தி பாதயாத்திரை ஆயரின் தலைமையில் அம்பிலிகோணம் ஆலயம் வந்து அடைந்தது. அங்கு தூப மன்றாட்டு நடத்தப்பட்டு, மதியம் குழித்துறை தாபோர் வளாகத்தில் வந்தடைந்தது. மதிய உணவிற்கு பிறகு 4.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு, ஆயரின் உடல் துயில் கொள்ளும் பேராலயம் வந்தடைந்து குருகுல முதல்வர் மோண். ஜோஸ் பிறைட் அவர்களால் திருச்சிலுவை பெற்று, தூபமன்றாட்டு நடைபெற்றது. சுமார் 100 பேர் அனைத்து நிலைகளிலிருந்தும் கலந்துகொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை MCA மறைமாவட்ட பொறுப்பாளர்களால் மேற்கொளளப்பட்டது.



### முதல் ஆயரின் நினைவு கூட்டம்

08.04.2026 அன்று காலை திருப்பலியும், நினைவு கூட்டமும், தூப மன்றாட்டும் நடைபெற்றது. நினைவு கூட்டத்தில் ஆயரின் பெயரில் மறைமாவட்ட MCA சார்பில் சங்க உதவித்தொகை இவ்வாண்டு ஆரம்பிக்கப்பட்டு 4 மாணவர்களுக்கு தலா ரூ. 10,000/- வீதம் வழங்கப்பட்டது.

1. M. விஜய் - விமலபுரம் - பொறியியல் - 10,000/-
2. J.S. ஜோபிஷா - மஞ்சத்தோப்பு - பீ.எட் - 10,000/-
3. K. அகனா - செண்பகதரிசு - நர்சிங் - 10,000/-
4. S. அனாமிக - மங்காடு - நர்சிங் - 10,000/-

### மருத்துவ உதவித்தொகை

ஆயரின் கரங்கள் என்ற பெயரில் மருத்துவ சிகிட்சைக்கு அவதிப்படுகின்ற நபர்களுக்கு உதவிசெய்யும் நோக்கோடு, இரண்டு நபர்களுககு.

திரு. ரெகு குமார் - சிதறால்

திருதி பிரதீபா - கடுவாக்குழி

இத்திட்டம் வருடம் முழுவதும் வழங்க முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

## Light 2026

வருடந்தோறும் நடத்தப்படும் Light - 2026-க்கு +2 தேர்வு எழுதிய மற்றும் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களுக்கு தேர்வு நடத்தப்பட்டு, அவர்களில் முதல் ஏழு இடங்கள் பெற்றவர்களை 8, 9, 10.05.2026 திருவல்லா மேக்பாஸ்டில் நடைபெறும் பயிற்சிக்கு அனுப்பப்படுகிறது.

# பெயர்விழா நல்வாழ்த்துகள்



அருட்தந்தை. ஜான் ஜோஸ்
மேய் 08



அருட்தந்தை ஷாஜி கிறிஸ்டோ
மேய் 09

## HEALTH FOR ONE MILLION (HOM)
### Diocese of Marthandam

- ஏப்ரல் 8-ம் தியதி மார் எப்ரேம் நினைவு தின நிகழ்வில் ஏழை பெண்களுக்கான திருமண நிதி உதவி மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்களால் வழங்கப்பட்டது.
- பேதுருவின் கரங்கள் மருத்துவ உதவி திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு மாதாந்திர நிதியுதவி வழங்கப்பட்டது.
- கன்னியாகுமரி அலகின் மாதாந்திர மருத்துவ விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது.



# MCYM
## *Youth Apostolate*

★ தேர்தலுக்கு முன்னோடியாக My Vote My Right என்னும் தேர்தல் விழிப்புணர்வு நிகழ்வு Online வழியாக இளையோர்களுக்கு ஏப்ரல் மாதம் 19 ஞாயிற்றுக்கிழமை மாலை 7.00 மணிக்கு நடத்தப்பட்டது. குழித்துறை மறைவட்டத்தை சார்ந்த வழக்கறிஞர் லாவண்யா அவர்கள் இளையோர்களுக்கான இந்த நிகழ்வினை தலைமையேற்று நடத்தினார். சுமார் 1.00 மணி நேரம் விழிப்புணர்வும் நாம் ஓட்டு இடுவதற்கான உரிமையும், கடமைகளையும் குறித்து சரியான விளக்க உரை நிகழ்த்தினார்கள். சுமார் 100 -க்கும் அதிகமான இளையோர்கள் இந்த online விழிப்புணர்வு நிகழ்வில் பங்கேற்றார்கள்.

### திருமண ஆயத்தப்பயிற்சி

2026 மே மாத திருமண ஆயத்தப்பயிற்சி வகுப்புகள் 15, 16 ஆகிய நாட்களில் **குழித்துறை மேய்ப்புப் பணி நிலையத்தில்** வைத்து நடைபெறுகிறது.

மரியாயின் சேனை

# கொமித்சியச் செய்திகள்

✦ **தவக்கால தியானம்**

மார்த்தாண்டம் கொமித்சியத்தின் சார்பில் தவக்கால தியானம் 28.03.2026 சனிக்கிழமை விமலபுரம் (நட்டாலம்) பங்கில் வைத்து நடைபெற்றது. குருகுல முதல்வர் Msgr. ஜோஸ்பிறைட் அவர்கள் துவக்கவுரை ஆற்றினார்கள். மார்த்தாண்டம் (இலவுவிளை) இளங்குருமட அதிபர் அருட்தந்தை சிபி அவர்கள் 'சிலுவைப்பாடுகள்' குறித்து தியான உரை நிகழ்த்தினார்கள். மார்த்தாண்டம் மறைமாவட்ட மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் 'இறைவன் எங்குமிருப்பவர். எல்லாம் அறிபவர்' என்ற தலைப்பில் தியான உரை நிகழ்த்தினார்கள். அருட்தந்தை சிபி அவர்களின் நற்கருணை ஆராதனையும் நற்கருணை ஆசீரும் வழங்கினார்கள். செல்வன் லோரஸ் மோன் (செல்லங்கோணம்) அவர்கள் இசையுடன் பாடல்களும், பாடி சிறப்பித்தார்கள். கொமித்சிய ஆன்ம இயக்குநர் மைக்கிள் முக்கம்பாலத் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். 150-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர், அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது. அனைத்து ஏற்பாடுகளையும் விமலபுரம் கியூரியா ஆன்ம இயக்குநர் அருட்தந்தை விபின்ஸ் வில்சன் அவர்கள் மிகச்சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்கள். அனைவருக்கும் நன்றிகள்.



# மறைவட்ட செய்திகள்

## நாகர்கோவில் மறைவட்டம்

❖ மார்த்தாண்டம் மறைமாவட்டம் உதயமான அந்த நாளிலே, மூன்றாவது மறைவட்டமாக தவழ்ந்த நாகர்கோவில் மறைவட்டமானது, கடந்த மேய் 10-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை தனது முதல் மறைவட்ட தின விழாவை நற்செய்தி பகிர்வு விழாவோடு சேர்த்து பெருவிளை தூய தேவசகாயம் திருத்தலத்தில் வைத்து சிறப்பித்தது. மறைவட்ட குருக்கள், கன்னியர், இறைமக்கள் சமூகம் ஒருசேர சுமார் 500-கும் மேற்பட்ட மக்கள் பங்கேற்று இறையாசீர் பெற்றனர்.

# ஆயரின் ஏப்ரல் மாத நிகழ்வுகள்



- 02 ➢ பாதங்கழுவுதல் மற்றும் பாஸ்கா திருவிழா திருப்பலியினை உண்ணாமலைக்கடை தேவாலயத்தில் நிறைவேற்றினார்.
- 03 ➢ புனித வெள்ளி திருச்சடங்குகளை தேமானூர் தேவாலயத்தில் நிறைவேற்றினார்.
- 05 ➢ உயிர்ப்புப் பெருவிழா திருச்சடங்கு மற்றும் திருப்பலிகளை தேமானூர் ஆலயத்தில் நிறைவேற்றி இறைமக்களை ஆசீர்வதித்தார்.
- 07 ➢ ஆயர் லாறன்ஸ் மார் எப்ரேம் ஆண்டகையின் சொந்த ஊராகிய வெள்ளெலும்பு ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றி, நினைவு பாதயாத்திரையை துவங்கி வைத்தார்.



- 08 ➢ மேதகு ஆயர் லாறன்ஸ் மார் எப்ரேம் ஆண்டகையின் நினைவுத் திருநாள் திருப்பலியினை மார்த்தாண்டம் பேராலயத்தில் நிறைவேற்றி கல்லறையில் தூபம் சமர்ப்பித்து இறைவேண்டல் செய்தார்.
- 10 ➢ கிராத்தூர் தேவாலயத்தில் புதிதாக புனரமைத்த அரங்கத்தை திறந்து வைத்து அர்ச்சித்தார்.
- 11 ➢ அம்பிலிக்கோணம் தேவாலயத்தில் மூன்று திருத்தொண்டர்களை குருத்துவ அருட்பொழிவு செய்து ஆசீர்வதித்தார்.
- 12 ➢ புதுகுருக்களின் முதல் நன்றித்திருப்பலியில் கலந்து கொண்டு ஆசீர்வதித்தார்.
- 14 ➢ திருசூரில் நடைபெற்ற Fiat Mission - மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.
- 17 ➢ டில்லியில் CBCI - Labour Commission அலுவலகத்தை சந்தித்தார்,
- 19 ➢ மரியாகிரியில் திருப்பலி நிறைவேற்றி இறைமக்களை ஆசீர்வதித்தார்.
- 20 ➢ மஞ்ஞுக்காலாயில் திருமண அருளடையாளத்தை நிறைவேற்றி ஆசீர்வதித்தார்.
- 20-21 ➢ மார்த்தாண்டம் மறைமாவட்ட குருக்கள் கூடுகைக்கு தலைமை தாங்கி கலந்துரையாடினார்.
- 21 ➢ மார்த்தாண்டம் மேரிமக்கள் கன்னியர் இல்லத்தில் ஜூபிலி கொண்டாடும் அருட்சகோதரிகளுக்காக திருப்பலி அர்ப்பித்து இறைவேண்டல் செய்தார்.

22 ➢ சூசைபுரம் தேவாலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி இறைமக்களை ஆசீர்வதித்தார்.

23 ➢ மங்காடு தேவாலயத்தில் புனரமைக்கப்பட்ட பலிபீடத்தை அர்ச்சித்து திருவிழா திருப்பலி நிறைவேற்றினார்.

24 ➢ கிராத்தூர் மார் கிறிஸோஸ்டோம் கல்வியியல் கல்லூரி பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

26 ➢ செல்லங்கோணம் மற்றும் பாறசாலை மறைமாவட்டம் பின்குளம் தேவாலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி இறைமக்களை ஆசீர்வதித்தார்.

27 ➢ பின்குளத்தில் திருமண அருளடையாளத்தை நிறைவேற்றி திருமண தம்பதியினரை ஆசீர்வதித்தார்.

28 ➢ இலவுவிளை இளங்குருமடத்தில் குருமாணவர்களுக்கு இளநிலை பட்டங்களை வழங்கி ஆசீர்வதித்தார்.


29 ➢ அணக்கரை தேவாலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றினார்.




## இம்மாதம் நினைவு கூர

மேய் 2025

1 – தொழிலாளர்களின் பாதுகாவலரான புனித யோசேப்பு
இறைவாக்கினர் எரேமியா
2 – அலெக்ஸ்லாண்டிரியாவின் மார் அத்தனாசியோஸ்
3 – உயிர்ப்புக்குப்பின் நான்காம் ஞாயிறு
மலங்கரை கத்தோலிக்க பொதுநிலையினர் தினம்
6 – நேர்மையாளர் யோபு, புனித டொமினிக் சவியோ
7 – நம் ஆண்டவர் இயேசுவின் சிலுவை கண்டெடுத்த நாள்
8 – திருத்தூதரான மார் யோவான்
மேரிமக்கள் கன்னியர் சபை நிறுவப்பட்ட நாள் (1938)
9 – இறைவாக்கினர் எசாயா
10 – உயிர்ப்புக்குப்பின் ஐந்தாம் ஞாயிறு
ஆர்வலராகிய திருத்தூதர் மார் சீமோன்
11 – சுலாவாய் இனத்தவரின் மார் சிறில் மற்றும் மெத்தோடியோஸ்
12 – சைப்ரசின் மார் எப்பிப்பானியோஸ்
நிசிபிஸ் ஆயரும் மல்ப்பானுமாகிய மார் யாக்கோபு
13 – அந்தியோக்கியாளர் மார் ஈசாக் மல்பான்
14 – சுலோக்கோ (நம் ஆண்டவரின் விண்ணேற்றம்)
மார் ஆதாயி
15 – கதிர்களை முன்னிட்டு தூய இறையன்னையின் நினைவு
மாத்தீயூஸ் மார் பக்கோமியோஸ் ஆண்டகையின் பெயர்விழா
17 – உயிர்ப்புக்குப்பின் ஆறாம் ஞாயிறு
சமூக தகவல் தொடர்பு தினம்
20 – நான்கு நற்செய்தியாளர்கள்
21 – புனித ஹெலனாள்
22 – புனித றீத்தா
24 – பெந்தக்கோஸ்துத் திருநாள்
25 – புனித சோபியா
26 – புனித பிலிப் நேரி
29 – தங்க வெள்ளிக்கிழமை
புனித தியோடோசியா
30 – கேசரியா நகரின் புனித எவுசேபியஸ்
தோமஸ் மார் எவுசேபியஸ் ஆண்டகையின் பெயர்விழா
ஆர்க் நகரின் புனித யோவான்
31 – பெந்தக்கோஸ்துக்குப்பின் முதல் ஞாயிறு
இறை அழைத்தல் தினம்

1


6


10


20


## ஆயர் லாறன்ஸ் மார் எப்ரேம் ஆண்டகையின் 29-வது ஆண்டு நினைவு பாதயாத்திரை மற்றும் நினைவுதின கொண்டாட்டம்



## குருப்பட்ட நிகழ்வுகள்



## குருக்களுக்கான தொடர் உருவாக்க பயிற்சி



## மேரி மக்கள் துறவற சபை



## MIDS



## MCA



## Health for One Million (HOM)



## MCYM




## மறைவட்ட செய்திகள்

